1137

உ

பதிவு எண் — M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு - சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனர்.

கிளை-8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: மாசி, கஉ 24—2—56 தளிர்-18

திருக்குறள் பிழிவு:

## பொருள் நிலை

நாடு பொருள்வகையிற் குறையில்லாததாய் இருக்க வேண்டும். அதாவது, எந்த ஒரு மனிதனுக்கும் உணவுக்கும் உடைக்கும் நிழலுக்கும் உடல் நலத்துக்கும் கல்வி முதலியவற்றிற்கும் போக்கு வரவு முதலிய ஏனை முக்கியத் தேவைகட்கும் குறைவு கூடாது. இப்படியிருக்கும் நாடுதான் 'வள நாடு' எனப்படும். இது மெய்தான். இது எப்படி நிறைவேறும் என்று முன்னுசிரியரும் கருதியிருக்கின்றனர். திருவள்ளுவர் போன்றோர் சில நெறி முறைகளும் தெரிவித்திருக்கின்றனர். அவை:

'முன் வினை அவரவர்க்கும் துணை செய்ய வேண்டும்; அப்படியானல் சிறிது முயன்றாலும் வேண்டியது கிடைக்கும்; ஒருகால், முன்வினை தக்கபடி இல்லை என்று தெரிந்தால், முயற்சிக்கு ஏற்ற கூலிப் பொருளாவது கிடைக்கும். ஆதலால், எந் நிலையிலும் முயற்சியில்லாமல் இருத்தலாகாது. முயற்சியாவது, கற்று உழைத்து நேர்மையாய் வகையாய்த் தொழில் செய்து தேடுதல்.

மேற்கொள்ளுந் தொழில், தீதற்றதாய், மக்கள் வாழ்க்கைக்கு உண்மையில் உதவுவதாய் இருக்க வேண்டும். பிறரிடம் திணிப்பதாய் அல்லது தேவையற்றதாய் இருத்தலாகாது.

முன் வினை துணை செய்ய வேண்டும் என்று இப் பிறவியிற் கருதுவதனல், இப் பிறவியிலேனும் பிறர்க்கு இடையூறுகள் செய்யாமல் இயன்ற உதவிகள் செய்துகொண்டுவந்தால், இப் பிறவியிலும் வரும் பிறவியிலும் அவை முன் வினையாய் வந்து உதவும்.

பிறர்க்கு உதவி என்றால், தேடும் பொருளில் ஆறில் ஒரு கூறுமட்டும் தன் செலவுகட்கு வைத்துக்கொண்டு, மற்ற ஐந்து கூறுகளையும் சான்றோர், அருள் நெறி, விருந்து, சுற்றம், அரசு என்னுங் காரணங்கட்காக நாட்டு நலன்களிற் செலவிட வேண்டும். தனக்கெனக் கொள்ளும் ஆறிலொரு பங்கிலும், சிறிது மிச்சங் கொண்டு தனது தேட்டத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும்.

இப்படி, உலகவரோடு ஒட்டி உதவியுந் துணையுமாய் வாழ்ந்தால், பொருள் ஊற்றெடுத்து எல்லார்க்கும் நிரவலாகி இடர் நீங்கும். இன்றேல், கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளிநாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.


| கிளை 8 | மன்மத, 24-2-56 | தளிர் 18 |
|---|---|---|


# நீராட்டு விழா

மாசி நீராட்டு:

மாசி மாதத்தில் நிறைமதி நாளில், மக விண்மீன் கூடுவது மாசிமகத் திருநாள்! நீராடுதல் இந்த நன்னாளின் தனிச் சிறப்பு. கடல், ஆறு, குளம் முதலிய நீர் நிலைகளில் ஆடவரும் மகளிரும் குழந்தைகளும் அனைவரும் மிக்க மகிழ்ச்சியுடன் நீராடி மகிழ்வர். மக்களே யல்லாமல், எல்லாம் வல்ல இறைவனுக்கும் நீராட்டு விழா நடத்துதல் மரபு.

ஞான சம்பந்தப் பெருமான் இன்னின்ன மாதத்தில் இன்னின்ன விழா சிறப்பு என்று கூறுகின்ற மயிலாப்பூர்த் திருப்பதிகத்தில், "மாசிக் கடலாட்டுக் காணாதே போதியோ பூம்பாவாய்" என்று தங் கால வழக்கமும் தோன்ற ஒரு குறிப்பு அருளிச் செய்திருக்கிறார்கள். "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே" "நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட" என்னும் தேவார திருவாசக அருள் மொழிகள், அக்காலத்தில் நீரில் இறை திருவருள் பொருந்தியிருந்து மக்களுக்கு உதவுதலைத் தெளிவிக்கின்றன. நீராடுதலானும் பருகுதலானும், அவை, தீவினைகளையும் நோய்களையும் போக்கி மக்களுக்கு உள்ளமும் பண்படுத்திப் புனிதம் செய்கின்றன.

தீர்த்தங்கள் உள்ள இடத்தில் தலங்களும் மூர்த்திகளும் அமைவது இயல்பு. தீர்த்தங்களால் தலங்கள் முதலியன அமைவதனால், தலங்களுக்கும் தீர்த்தங்கள் என்று பெயருண்டு. தல யாத்திரையைத் தீர்த்த யாத்திரையென்றே சொல்லுவார்கள்.

காவிரி நீராடல்:

தீர்த்தங்களை யெல்லாம் பொதுவாகக் கங்கை என்று சொல்வர். கங்கை ஆறு என்பது, இமயமலையில் பனி கரைந்து பரவி வருவதனால், மின் ஆற்றல் நிரம்பி மேன்மையாயிற்று; அதனால் அதன் தூய்மையும் நலமும் விளங்குகின்றன.

ஆனால், காவிரியாறு தவச் சிறப்பும் ஞானச் சிறப்புமாகிய உணர்வு மின் வாய்ந்து விளங்குகிறது; கங்கை முதலிய ஆறுகள் பருப் பொருளில் தூய்மையானவை. காவிரியாறு நுண்ணிய தவ ஞான உணர்வில் தூய்மையானது.

காவிரியாற்றின் தோற்றத்திற்கும் பயனுக்கும் அகத்தியர் போன்ற தவ முனிவரர் தவஞானச் சிறப்பும் நல்வாழ்த்தும் காரணம் என்பர்.

இந்தியாவிலுள்ள ஆறுகள் அங்கங்கும் பரவி நாட்டுக்குப் பயன்பட்டாலும் அவற்றின் நீர் கடலில் கலப்பதும் மிகுதியாயிருக்கிறது. காவிரியாற்று நீர் ஏறக்குறைய முற்றிலும் நாட்டுக்கே பாய்ந்து பயன்பட்டுவிடுகிறது; பெயருக்குத்தான் அது கடலோடு கலப்பது என்பது. தவத்தோர் வாழ்த்து இப்பெரும் பயனுக்குக் காரணம். ஆதலால் கங்கை முதலிய எல்லா ஆறுகளிலும் கடலிலும் ஏனை ஊற்றுக்களிலும் மக்கள் நீராடினாலும் காவிரியில் நீராடுதலைப் போல உணர்வு மேன்மை பெறுதல் இயலாது. கங்கை முதலிய ஆறுகளே தம் தூய்மைக்காகக் காவிரியில் வந்து நீராடிச்செல்லுகின்றன என்று இதனால் ஒரு சொல் வழங்குகிறது. மேலும், காவிரியின் இரு கரையிலும் மூர்த்திகளும் தலங்களும்

ளாராய்ச்சிக்கேற்ற நுண்ணறிவுடையோர் நினைக்குந்தோறும் அவர்கள் மனத்தைக் கரைப்பது; காரணம், முதலிற் காணப்படும் கருத்தைவிட அதன்பின் காணப்படும் கருத்து சிறந்தும் விரிந்தும் தோன்றும்; இப்படி ஓர் அற்புதமான குணமுடையது திருக்குறள்.

அறத்துப்பாலில் உள்ள துறவறம் என்னும் பகுதி, முப்பாற் பொருள்களிலும் முத்திக்குக் காரணமானது; அச் சிறப்பு அதற்கு இருத்தலால், அது தூயது. திருவள்ளுவர் நூல்முறை எல்லா வருணாச்சிரமங்களுக்கும் பொது.

திருக்குறள் பொருட் பாலில், பிற் காலத்தார் அமைச்சு முதலிய ஐந்தையும் 'அங்கவியல்' என ஓர் இயலாக்கியும் வழங்குவர்; திருவள்ளுவர் கூறிய காமத்துப்பாலின் இயல்கள் மாட்சிமையானவை.

திருக்குறள் தோன்றுமுன், மெய்யாய கருத்துப் பொய்யாய் மறைந்தும் பொய்யாய கருத்து மெய்யாய் விளங்கியும் கிடந்தன.

முதல் வழி சார்பு எனப்பட்ட அறநூல் பொருள் நூல் இன்ப நூல் விட்டு நூல் என்பவற்றில், செம்பொருள் ஆக்கப் பொருள் குறிப்புப் பொருள் என இம் மூவகையால் கொள்ளக் கிடந்த காட்சிப் பொருள்களும் கருத்துப் பொருள்களுமாகிய எல்லாப் பொருள்களும் திருக்குறளில் உள்ளன.



திருக்குறளுக்கு, பாரதம் இராமாயணம் மநு நீதி வேதம் என எந்நூலும் இணையில்லை; முன்நூல் இணையில்லை; முன்நூல் எவையும் நிகரில்லை; உலகு முழுவதிலும் நிகரில்லை; அறம் பொருள் இன்பம் வீடு என்னும் முக்கியமான உறுதிப் பொருள்கள் பற்றி, முன் நூல்களால் தெரியாதனவெல்லாம் திருக்குறளால் தெரிந்தன; திருக்குறள் தோன்றிய பின்பே இவை பொய் இவை மெய் என்று உலகவர் தெளிய முடிந்தது.

திருக்குறளின் நயனும் பயனும் வான் உலாவும் தண்ணிலாவுக்கும் இல்லை. இருள் நீக்குந் திறத்தில், வெள்ளி வியாழன் ஞாயிறு திங்கள் இவை அத்தனையும் சேர்ந்தாலும் திருக்குறள் ஒன்றுக்கு நிகராகா; தெள்ளமுதின் தீஞ்சுவையும் இதன் சுவைக்கு நிகரில்லை; மேலும், திருக்குறளின் சுவை உலகோரனைவர்க்கும் கிடைக்கும்.

உலகுக்குத் திருவள்ளுவர் குறள் துணை; எல்லா உண்மைகளும் இதனில் உள்ளன.

**தனிச் சிறப்பு:**

திருக்குறள் எல்லார்க்கும் பொது; அரசினர் தம் முடிமேற் கொள்ளத்தக்கது.

அறிவுக்கு இன்பம் தருவது திருக்குறள்; மதிப் புலவோர்க்கு மேன்மேலும் ஊறிவரும் அறிவுஊற்று; ஆய்வதை விடுத்து அப்படியே திளைக்கத் தக்கது.

திருக்குறள், வகையானது; நன்கு கட்டுரைக்கப்பட்டது; உளங்கொள்ள இயற்றப்பட்டது; உள்ளம் உருக்குவது; எண்ணும் பொருள் உள்ளது; சிந்திப்போர் சிந்திப்பனவெல்லாம் அமைந்தது; குறைவிலாநிறைநூல்; நான்முறையில் தக்க திறப்பாடுடையது. இலக்கண இலக்கிய நலங்களும் ஏனை எல்லா நூலியல்புகளும் சிறந்தது; இலக்கியச் சுவையுடன் அருட் சிறப்பும் வாய்ந்து உய்யு நெறி காட்டி இருவினைக்கும் மாமருந்தாய் உதவுவது; கேள்விக்கு இவ்வொரு நூலும் போதும்.

ஆவனவும் ஆகாதனவும் திருக்குறளால் அறிந்து கொள்ளலாம்; திருக்குறளிலிருந்து எடுத்து விளக்கலாம்; திருக்குறள் சொல்லுகின்றபடியே வாழ்க்கையிலும் ஒழுகலாம். திருக்குறள் பயில்வோர் மனவாக்குச் செயல்களில் திரு சேரும்.

இம்மை மறுமை வீடு என எல்லாம் தருவது திருக்குறள்; திருக்குறளால் உலகம் அழுக்கற்றது.

—திருவள்ளுவ மாலைத் தொகுப்பு

அருட் செல்வமும் அதற்குத் தக்க தெய்வத் தன்மையும் உடையவர் திருவள்ளுவர்!

திருவள்ளுவர் என்னும் பெயருள், 'திரு' என்பது உயர்வையும், 'வள்ளுவர்' என்பது வண்மையுடையர் என்பதையும் விளக்கி நின்றன; மெய்ப் பொருள்களை யெல்லாம் தொகுத்து உலகத்தார்க்கு



பொருள். அதாவது, தாயார் பிள்ளைமேல் அருள் செய்தல்போலத் திருவள்ளுவர் உலகத்தார்மேல் அருள் செய்தார் என்பது; தாயைப் போல் இரக்கங் கொண்டு திருக்குறள் உதவினுர் என்பது கருத்து.

திருவள்ளுவர், குற்றமற்ற புலமையாகிய தேனைச் சொரிகின்ற செவ்விய நாவாகிய மலரையுடையவர். சீர் சால் வழுதியும் சங்கப் புலவரும் தழைத்து இனிதோங்கிய மதுரைக்குத் திருவள்ளுவரால் மேலும் சிறப்புண்டாயிற்று. வடமதுரைக்குச் சிவபிரான் ஆதாரம் என்று சொல்லுவர்; இப்பக்கம் தென் மதுரைக்குத் திருவள்ளுவர் ஆதாரமாவர்.

திருக்குறளில் அடங்காதது ஒன்றில்லை; இருக்கின்றது என்றுல், அது பிறரால் அறியப்படுவதன்று.

பூர்வ வேதத்தை 'நித்தியம்' என்பது சிலர் கொள்கை. அது வட மொழியும் திருக்குறள் மறை தென் மொழியுமாய் நின்று சில வேறுபாடு உடையன போல் தோன்றினும் நுண்ணுணர்வால் நோக்குவார்க்குக் கருத்து வேறுபடாது.

'நவின்றோர்க்கினிமை' 'நன்மொழி புணர்த்தல்' கொண்டு ஓதுதற்கு எளிதாய், 'ஆழமுடைமை' கொண்டு உணர்தற்கு அரிதாகி, 'விழுமியது பயத்த'லால் வேதப் பொருள் சிறந்து, இவ்வாறு பிற அழகுகளும் அமைந்து திகழ்வது திருக்குறள்! அது, பொரு

முன் வேதம், பொருள் உணரவும் ஓதவும் எளிதன்று; ஆதலின் 'அரு மறை' எனப்பட்டது. திருவள்ளுவர்க்கு, 'முதற பாவலர்' என்று ஒரு பெயர் உண்டு; முதன்மையுடைய பாவலர் என்பது கருத்து; நால் வகைப் பாக்களில் வெண்பாக்களும் அவற்றுள்ளும் குறள் வெண்பாவும் தலைமை பெற்று நிற்றலின் அக் குறள்வெண்பாவால் நூல் செய்த வல்லமையுடையர் என்றும் கூறலாம். புலமையில் நாயனார்க்கு ஒப்பில்லை.

நான்கில் மூன்று அடங்குவது இயல்பு; ஆனால் திருவள்ளுவர் முப்பாலில் நாற்பால் அடக்கியது வியப்புக்குரியதாயிற்று; பாண்டிய மன்னன் இதனை அறிந்து மகிழ்ந்தான்.

அறத்துப் பாலுள் அடங்காது நூற்கெல்லாம் பொதுவாய் நிற்பது பாயிரம். இம்மை மறுமை வீடு மூன்றும் பயக்கும் சிறப்புடையன அறம் பொருள் இன்பப் பகுதிகள், யாவர்க்கும் பொதுப்பட நாடித் தொகுக்கப்பட்ட அறத்தின் கூறுபாடுகளே திருக்குறள் அறத்துப்பால். முன் நின்ற அறமும் பின் நின்ற இன்பமும் கை கூடுதற்குத் துணையாய் நிற்பது பொருள்; அப் பொருளின் பாகுபாடுகளெல்லாம் பொருட் பாலில் அடங்கும்.

திருவள்ளுவர்க்கு 'மாதாநுபங்கி' என்று ஒரு பெயர் உண்டு; மாதா அநுபங்கி என்றால் மாதாவை நிகராகக் கொண்டு நடக்கின்ற ஒழுங்கினன் என்பது



அருள் செய்தவர் என்னும் காரணம் பற்றி வந்த பெயர். புலவர்க்கரசன் வள்ளுவன்!

நான்மறை பூர்வ வேதமும், பாரதம் மத்திய வேதமும், திருக்குறள் உத்தர வேதமும் ஆயின. வேதத்தில் அறம் பொருள் இன்பம் வீடு பற்றிய கருத்துக்கள் ஒன்றோடொன்று மயங்கிக் கிடக்கின்றது; திருக்குறளில் அது அது தனது வகையோடு சேரும்படி தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றது. திருக்குறளுக்கு அழகு, சொன் முடிபு பொருள் முடிபின் குணங்கள். திருக்குறள் இருமை யின்பங்களும் விளக்கும்.

உலகத்துச் சமயாசாரியர்களாலும் பிறராலும் ஒன்றற்கொன்று மாறுகக் கொள்ளப்பட்ட பொருள்கள் போல்வதன்று, திருக்குறளின் மெய்ப்பொருள்! திருக்குறள் ஒரு திருமுறை!

திருக்குறளை முன்னே பூசித்து மெய் மொழி மனங்களால் வணக்கஞ் செய்து பின் கேட்க வேண்டும். இவ்வாறு, உக்கிரப் பெருவழுதி என்னும் தன்னிகரில்லா மன்னவர் பெருமான், தான் மேற்கொண்ட சிறப்பைப் பலரும் அறிந்து மேற் கொள்ளக் கூறினன். அவன், கலையுணர் புலமையில் தலைமையோனாகி விதிமுறை வழாது முதுநிலம் புரக்கும் பெருந்தகை!

எப்படி மிகச் சிறிய பனித்துளியில் மிகப் பெரிய பனைமரத்தின் சாயை அடங்கி விளங்குகின்றதோ

அப்படியே மிகச் சிறிய இக்குறள் வெண்பாவில் மிகப் பெரிய பொருள் அடங்கி விளங்குகின்றது. சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப்பட்டனவோ அப்படிப் பிறரால் அமைக்கப்படுதல் கூடாமை. வள்ளுவர் வாலறிவினர்; மெய்யறிவினர். திருக்குறள் தன் சிற்றடிகளால், அளவுபடாத நினைப்பின்பொருள்களை அளக்கின்றது; நினைக்கப்பட்டனவெல்லாம் திருக்குறளில் அளவு செய்யப்பட்டன. உலகத்துப் பொருளெல்லாம் திருக்குறள் அளக்கின்றது.

திருவள்ளுவர், தாமே முழுதுணர்ந்தவர்; ஆசிரியர் பிறர் அறிவிக்க அறிந்திலர். அறம் முதலிய பொருள்களை, அறியாதவர் எளிதின் அறிய முறையால் சொல்லியருளியவர். தெய்வப் புலவராகிய திருவள்ளுவரை ஒரு மனிதன் என்று அவமதிப்பது இழிவு.

வேதத்துக்கு உட்பட்ட வியாச மதம், சைமினி மதம், பதஞ்சலி மதம், கபில மதம், கணாத மதம் அக்ஷபாத மதம், சைவம் வைணவம் முதலிய சமயத்தாரே யன்றிச் சைனம் பௌத்தம் முதலிய மதத்தாரும், பலவகைப்பட்ட சாதியாரும், தேசத்தாரும், காலத்தாரும், பிறரும் தழுவுதலால், திருக்குறளே பொது வேதம்!

சேர சோழ பாண்டியர் எனப்படுகின்ற மூவரசருடைய பெரிய முடிகளின் மேலும் கொள்ளப்பட்ட மாலை திருக்குறள்!



முன் கேட்கப்பட்ட நூல்களிலெல்லாம் பல சொற் குற்றங்களும் பொருட் குற்றங்களும் கண்டு பொருது தலையில் அறைந்துகொண்டு வந்தமையால் சாத்தற்குப் புண்பட்டுக் குத்தல் உண்டாயிருந்தது; திருக்குறளில் ஒரு குற்றமும் காணப் பெறுமையால் அது நீங்கிற்று; திருக்குறள் முப்பாலும் தலைக் குத்துக்கு மருந்து!

இதுவரையில் ஒரு நூலைக் கற்றோர்க்கு வேறு நூலைக் கற்க விருப்பம் உண்டாவதுண்டு; இப்போது, திருக்குறள் கற்றோர்க்கு அப்படி உண்டாவதில்லை; திருக்குறளில் எந்நூற் பொருளும் அடங்கியிருக்கின்றது; பல நூல்களையுங் கற்க விரும்புவோர்க்கு இது ஒன்றே அமையும்.

திருக்குறள் ஆற்றல் உடையது; அதாவது, சொற் செறிவின் திட்பம் உடையது. முன் வேதம், சொல்லில் தலைமையுடையது. திருக்குறள் வேதம், பொருளில் தலைமையுடையது. திருக்குறள், எல்லாராலும் ஓதப்படுதலின், அவ் வேதத்தினும் சிறப்புடையது. புலமை நிரம்புதற்குத் திருக்குறளிலுள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் போதும். பல வகைப்பட்ட நூல்களின் கருத்துக்களெல்லாம் இதனுள் விளங்கி நின்றன.

திருக்குறளுக்கு மேற்பட்ட நூல் ஒன்று உள்ளதென்று சொல்ல வல்லவர், தமிழ் மொழிப் புலவரிலும் யாரு மில்லை; வடமொழி முதலிய ஏனை மொழிப் புலவரிலும் யாரும் இல்லை.

ஏராளமாகக் காணப்படுவது போல இந்தியா முழுதுமே எங்கும் இல்லாமையால், காவிரியின் புனிதமும் தவஞானச் சிறப்பும் இனிது விளங்கும்.

**தீர்த்தமும் அமிழ்த சத்தும்:**

தீர்த்தத்தில், பொதுவாக அமிழ்த ஆற்றல் உண்டு. ஆவின் பால் முதலிய அமிழ்தமும், அன்னப்பாலும் நீரின் திரிவால் அமைவனவே.

இத்தகைய அமிழ்த சத்து இந்தியாவிலுள்ள கங்கை முதலிய எல்லாத் தீர்த்தங்களிலும் பதிந்திருந்தாலும் சிறப்பாகக் காவிரியிலும் அதன் தலங்களிலும் நிரம்பி உள்ளதென்று பெரியோர்கள் கண்டிருக்கிறார்கள்.

காவிரிக் கரையிலுள்ள தலங்களிலும் கும்பகோணம் என்பது அமிழ்த சத்துக்குப் பெயர் போனதாய் உள்ளது.

**கும்பகோணமும்**

**அமிழ்த கும்பமும்:**

குடமூக்கு என்பது இதன் பழைய பெயர். கும்பம் அல்லது குடம் என்பது அமிழ்த கலசத்தைக் குறிக்கும். கோணம் அல்லது மூக்கு என்பது, அந்தக் கலசத்திலிருந்து அமிழ்தம் ஒழுகும் வாயிலைக் குறிக்கும். கும்பகோணம் என்னும் தலம் அமிழ்த கலசமானால், அதன் மூக்கு என்னும் வாயில் அங்கே விளங்கும் மகாமகத் திருக்குளத்துக்கு ஆகும். அதனால், அக்குளத்து நீர் அமிழ்தம் ஊறும் வாயில் என்பது விளங்குகின்றது.

நீருக்கு இயற்கையாகவே அமிழ்த ஆற்றல் உண்டென்பது, "வானின்று உலகம் வழங்கிவருதலால், தான் அமிழ்தம் என்றுணரற்பாற்று" என்னும் பொய்யா மொழியினாலும் தெளிவாகும். அது கும்பகோணத்தின் மண் சாரத்தால் பின்னும் அமிழ்தாகின்றது. கும்பகோணத்தின் அருகில் ஓடும் காவிரி, வடிவும் வலிவும் குறையாமல் உரிய அளவில் காட்சியளிக்கின்றது.

ஊழிக் காலத்தில் எல்லாப் பருப் பொருள்களும் அழிந்துபோக, மீண்டும் அவற்றின் தோற்றத்திற்குக் காரணமான ஒலி மூலங்கள் (சிருஷ்டி பீஜங்கள்) மட்டும் அமிழ்த உணர்வு என்னும் அநுக்கிரக உணர்வுடன் பொருந்தி, ஊழித் தலைவனது இதய கும்பத்தில் நிலை பெற்றிருக்கும். அதிலிருந்துதான் மீண்டும் படைப்பு முதலானவை நிகழும்.

இறந்துபோன மக்களின் சுடலை யெலும்பில் பால் தெளித்து அவர்கள் உணர்ச்சி காக்கப்படுவது போல, அழிக்கப் பட்ட உலக மூலமும் அருளமிழ்தத்தாற் காக்கப்பட்டு வரும். அத்தகைய ஊழிக் காலத்து மூல அமிழ்தத் தலமே கும்பகோணம் என்பது!

மறைந்தோர் என்புகளை ஒரு குடத்தில் பால் தெளித்து எடுத்துவைப்பது இன்றும் வழக்கம். அதைப் போல ஊழியில் மறைந்துபோன உலக மூலம் இந்த அமிழ்த கும்பத் தலத்தில் விளங்குகின்றது.

கும்பகோணம் என்னும் ஒரு தலத்தில், இந்தியத் தலங்கள்பலவும் பொருந்தியிருப்பது போலப் பல திருக்கோயில்கள் அமைந்திருக்கின்றன. அவற்றில் முக்கிய தலம், கும்பேசுரர் கோயில். படைப்பு அதிலிருந்து தோன்றுவதனால் ஆதி கும்பேசுவரர் கோயிலென்றும் அதற்குப் பெயர். மங்களம் என்னும் நன்மை காக்கப்படுகின்ற மேற் சொன்ன காரணங்களால், அங்கே அம்பிகையின் பெயர் மங்களாம்பிகை என்று வழங்கப்படுகின்றது. அந்த அம்பிகையால் உலகுக்கு மீண்டும் மங்களம் உண்டாகின்றது.

**மகா மக காலம்:**

இனி, மகா மக காலத்தின் தனிச் சிறப்பும் கருத வேண்டும். முழு நிலவில் மக மீன் வருகிற காலம் மாசி மாதம்: அப்பொழுது சிம்மராசிக்குரிய சூரியன் தன்மகன் சனியின் வீடுகளில் ஒன்றாகிய கும்பராசியில் இருப்பான். சிம்மராசிக்குக் கும்பராசி ஏழாம் இடம்; கும்பகோணத்தில் கும்பராசி சிறந்த வன்மையை ஊட்டும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மற்

ஒரு பெருஞ்சிறப்பும் தோன்றுகின்றது. பிரகஸ்பதி என்னும் குரு, அப்பொழுது சூரியனுக்குரிய சிம்மராசியில் வந்து நிற்கிறது. இந்நிலையில் சூரியனுக்குக் குரு பார்வையுள்ளது. அப்படியே சந்திரனும் சிம்மராசியில் அமைகின்றது. கும்பராசியை இங்ஙனம் குருவும்சந்திரனும் ஒருசேரப் பார்க்கின்றனர். அப்படியே, சூரியனும்சிம்மராசியை நோக்குகின்றான். மேலும், இந்தப் பார்வைகள் ஒன்றுக்கொன்று முழுப் பார்வைகள். அல்லாமலும், சூரியன் தங்கியுள்ள கும்பராசி சனியின் வீடாதலால், ஒரு வகையில் சனி வல்லமைக்கும் குரு சந்திரப் பார்வைகள் பொருந்தி நலம் உண்டாகின்றது. இதனால், கும்பராசிக்கும், அமிர்த கும்பத்திற்கும், கும்பகோணத்திற்கும், மகா மக நீர் ஊறும் இடத்திற்கும், என்றுங் காணாத மிக வலிவான பேருணர்வு மாட்சி பெருக்கெடுக்கின்றது.

சூரியன் சனி என்பவை உலகியல்; குரு, சந்திரன் என்பவை அருளியல்! உலகியலில் இவ்வுணர்வியலின் தொகுப்பான பார்வைப் பெருவெள்ளப் பாய்ச்சல், நிகழ்கின்ற காலம் மக்களை நன்னெறிப் படுத்துதற்கும் நலப்படுத்துதற்கும் நிகரற்ற நற்காலமாகும், பாவங்களைப் போக்குதல். நோய்களை நீக்குதல், தேவைகளை நிரப்புதல் போன்ற சிறந்த வன்மையான காலம் அது!

பொதுவாகவே, மாசி மாதம் சிவமாதம் என்றும் அதாவது மங்கள மாதமென்றும் நோன்பு மாதமென்றும் வழங்கப் பெறும். சிவராத்திரி இந்த மாதத்தில் வருவதுதான். பாற்கடலின் அமிழ்தம் தோன்றிய காலமும் இந்த மாதமாகவே சொல்லுவார்கள். அப்படியிருக்கிற போது, பன்னிரண்டு ஆண்டுக்கொருகால் இந்த மகமும் சூரிய குரு சந்திரப் பார்வைகளால் மகா மக மாகச் சிறக்குமானால், மகாமகம் எவ்வளவோ மேன்மையான காலந்தானே!

உலக நலங்களுக்கு அல்லாமல் ஞான நலங்களுக்கே இந்த மாசி மாதத்தைப் பயன்படுத்த வேண்டும். மார்கழி மாதம் பாச ஞானத்தை நீக்கும் என்றால், மாசி மாதம் பசு போதத்தையும் நீக்கிச் சிவ ஞானம் பயப்பதாகும். அருளமிழ்தத்தா லல்லது அது வாயாது. இச்சிறப்புகளால் மகா மக காலத்தில் கும்பகோணத்தில் காவிரியின் ஊறலாகிய மகா மகக் குளத்தில் நூறாயிரக் கணக்கில் மக்கள் நீராடுதலும். ஆதி கும்பேசுரரை வணங்குதலும் வழக்கமா யிருக்கின்றன. ஊழியில் உலப்புண்ட ஆன்மாக்கள், மீண்டும் நல்ல அநுக்கிரகம் பெற அது காரணமாகும்.

மக்கள் மட்டுமன்றிக் கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, கோதாவரி, மகாநதி, சரயு, பாலாறு முதலிய தீர்த்தங்கள் பலவும் காவிரியில் கலந்து நீராடிச்செல்லுகின்றன என்பர். தீர்த்தங்களின் அதி தேவதைகளைக் கன்னிகள் என்பார்கள், அவர்கள், மகா மக குளத்தில் மகா மக காலத்தில் தம் தீமைகள் போக ஒருங்கு கூடி நீராடுவர்.

'வரும்'

—தென் ரெயில்வே வெளியீடு.

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட்

கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்

நூலாடைகளுக்கும்

சிறந்த இடம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்,

53. கிடங்குத் தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)